செ.வெ.எண்:52/2020 நாள்:28.01.2020

**பத்திரிக்கைச் செய்தி**

**சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்.இ.ஆ.ப., அவர்கள் செய்திக் குறிப்பில் தெரிவித்ததாவது,**

அரசு சிறப்புப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக சிவகங்கை பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு தொடக்கப்பள்ளியில் ஒரு கணிணி ஆய்வகம் அமைப்பதற்கும், அந்த ஆய்வகத்தில் பணிபுரிந்து பாடம் போதிக்க மாதம் ரூ.15,000/- தொகுப்பூதிய அடிப்படையில் தொழிற்பயிற்றுநர் (Vocational Instructor – Computer Science) ஆகப் பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

தொழிற்பயிற்றுநர் (Vocational Instructor – Computer Science) பணியிடத்திற்கு விண்ணப்பிப்போர் கீழ்க்காணும் கல்வித் தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

1) B.Ed., கல்வித்தகுதியுடன் கீழ்காணும் ஏதவாதொரு பட்டப்படிப்பு முடித்தவராக இருக்க வேண்டும்.

   அ) B.E. பட்டப்படிப்பு (Computer Science) அல்லது
   ஆ) B.Sc., பட்டப்படிப்பு (Computer Science) அல்லது
   இ) BCA பட்டப்படிப்பு அல்லது
   ஈ) B.Sc., பட்டப்படிப்பு (Information Technology)

2) வயது வரம்பு இல்லை.

3) தொகுப்பூதிய அடிப்படையிலான நியமனம் என்பதால் இனசுழற்சி முறை கடைப்பிடிக்கப்பட மாட்டாது.

மேற்குறிப்பிட்ட தகுதியுடைய பார்வையற்றவருக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்படும்.

எனவே, மேற்காணும் தகுதிகளையுடையவர்கள் 07.02.2020-க்குள் சுயசான்றொப்பமிட்ட ஜெராக்ஸ் நகல் சான்றுகள் / ஆவணங்களுடன் சிவகங்கை நகர் இளையான்குடி சாலையிலுள்ள பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு தொடக்கப்பள்ளி தலைமையாசிரியருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

காலதாமதமாகவும், குறைபாடுகளுடனும் கூடிய விண்ணப்பங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் தொழிற்பயிற்றுநர் (Vocational Instructor – Computer Science) பணியிடத்திற்கு விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**::வெளியீடு::**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.